**SPA தொடர்பானக் கேள்வி பதில்**

1. மத்திய அரசாங்க வேலைகளுக்கு விண்ணப்பிப்பது எப்படி?

மத்திய அரசாங்க வேலைகளுக்கு, www.spa.gov.my எனும் அகப்பக்கத்தின் மூலம் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

2. என் கல்வித் தகுதிக்கு ஏற்ற வேலைகளை எப்படித் தேர்ந்தெடுப்பது?

உங்கள் கல்வித் தகுதிக்கு ஏற்ற வேலைகள் தொடர்பான விளக்கங்கள், "Maklumat Jawatan (Deskripsi Tugas/Gaji Permulaan)" எனும் பகுதியில் இடம் பெற்றிருக்கும்.

3. மத்திய அரசாங்க வேலைக்கான விளம்பரங்கள் எப்போது பத்திரிக்கைகளில் வெளியிடப்படும்?

SPA, 1997-ஆம் ஆண்டு முதல் விளம்பரங்களைப் பத்திரிக்கைகளில் வெளியிடுவதில்லை. இருப்பினும் வருடத்திற்கு 2 முறை இது சம்பந்தமான நினைவுறுத்தல் பத்திரிக்கைகளில் அறிவிக்கப்படும். விண்ணப்பங்களை வருடம் முழுவதும் அனுப்பலாம்.

4. SMSM மூலம் விண்ணப்பிக்கும் போது, என்னைப் பற்றிய குறிப்புகள் (resume) மற்றும் நற்சான்றிதழ்கள் போன்றவற்றை உடன் அனுப்ப வேண்டுமா?

தேவையில்லை. விண்ணப்பப் பாரத்தை முறையாகப் பூர்த்தி செய்வதே போதுமானது. நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டால் இவற்றை உடன் கொண்டு செல்ல வேண்டும்.

5. ஏன் சில விண்ணப்பங்கள் பதிவு செய்ய இயலாமல் போகின்றன?

முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களைக் கணிணியில் பதிவு செய்ய முடியாது. ஆகவே, விண்ணப்பங்களைச் சரியான தகவல்களுடன் முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டியது அவசியம்.

6. ஏன் விண்ணப்பத்தைப் புதுப்பிக்க வேண்டும்?

ஓர் ஆண்டு காலத்திற்குள் நீங்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படாவிட்டால் நீங்கள் விண்ணப்பத்தைப் புதுப்பிக்க வேண்டியது அவசியமாகும். இவை அரசாங்கத் துறைகளில் வேலை செய்ய ஆர்வமுள்ளவர்களின் விபரங்களை மட்டும் SPA தனது தகவல் தளத்தில் வைத்திருக்க உதவும்.

7. அரசாங்க வேலை செய்து கொண்டிருப்பவர்கள் ஏன் மேலதிகாரியின் அனுமதியுடன் விண்ணப்பிக்க வேண்டும்?

Perintah Am 17 (P.U (A) 176/2005)-படி அரசாங்க வேலை செய்து கொண்டிருப்பவர்கள், வேறு வேலைகளுக்கு விண்ணப்பிக்க எண்ணினால் மேலதிகாரியின் அனுமதியைப் பெற வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலம் மேலதிகாரியின் சம்மதம் கருத்தில் கொள்ளப்படும். நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டால், Laporan Penilaian Prestasi மற்றும் Kenyataan Perkhidmatan ஆகியவற்றை உடன் கொண்டு செல்ல வேண்டும்

8. அரசாங்க வேலை செய்து கொண்டிருப்பவர்கள் இணையத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியுமா?

SPA அதிகாரத்திற்கு உட்பட்ட வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம். நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டால், மேலதிகாரியிடம் அனுமதிக் கடிதம் பெற்றுச் செல்ல வேண்டும். இருப்பினும், தற்போது செய்து கொண்டிருக்கும் வேலை நிரந்தரமாக்கப்பட்டப் பின்னரே (disahkan) வேறு வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

9. அரசாங்கம் அனைத்து உயர்க்கல்வி நிலையங்களின் சான்றிதழ்களையும் அங்கீகரிக்கின்றதா?

இல்லை. குறிப்பாக தனியார் உயர்க்கல்வி நிலையச் சான்றிதழ்களில் குறிப்பிட்ட சில சான்றிதழ்கள் மட்டுமே அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படுகின்றன. http://www.interactive.jpa.gov.my/frmmainiktiraf.asp என்ற அகப்பக்கத்தின் வாயிலாக உங்கள் சான்றிதழ்களை நீங்கள் பரிசோதித்துக் கொள்ளலாம்.

10. என் கல்வித் தகுதியை விட குறைந்த கல்வித் தகுதியைக் கோரும் வேலைகளுக்கு நான் விண்ணப்பிக்க முடியுமா?

விண்ணாப்பிக்க முடியும். உதாரணமாக, நீங்கள் டிப்ளோமா அல்லது எஸ்.டி.பி.ம் கல்வித் தகுதியைக் கொண்டிருந்தால், எஸ்.பி.ம் கல்வித் தகுதியைக் கோரும் வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம். அதே போல, இளங்கலைப்பட்டக் கல்வித் தகுதியைக் கொண்டிருந்தால், டிப்ளோமா அல்லது எஸ்.டி.பி.ம் தகுதியைக் கோரும் வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம். இருப்பினும், மெட்ரிகுலேஷன் கல்வித் தகுதி, டிப்ளோமா அல்லது எஸ்.டி.பி.ம் தகுதிகளுக்கு ஈடாக ஏற்று கொள்ளப்படாது

11. அரசாங்க வேலை கிடைத்தும் அதனை நான் நிராகரித்து விட்டால் எத்தகைய விளைவுகளைச் சந்திக்க நேரிடும்?

வேலை கிடைத்தும் அதனை நிராகரித்து விட்டால் முதல் 3 வருடங்களுக்கு அதே வேலை தொடர்பான நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படமாட்டீர்கள். நீங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருக்கும் மற்ற வேலைகளுக்கு ஒரு வருட காலத்திற்கு அழைக்கப்படமாட்டீர்கள். இருப்பினும் மருத்துவர், பல் மருத்துவர் மற்றும் மருந்தக அதிகாரி வேலைகளுக்கு இது பொருந்தாது.

12. அரசாங்க வேலை செய்து கொண்டிருப்பவர்கள் அல்லது KPSL அதிகாரிகளுக்கு ஏதும் சலுகைகள் வழங்கப்படுகின்றதா?

குறைந்த பட்சத் தகுதிகளைக் கொண்டிருக்கும் KPSL அதிகாரிகள், புது வேலைக்கு விண்ணப்பிக்கும் போது நேரிடையாக நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். ஏற்கனவே அரசாங்க வேலை செய்து கொண்டிருப்பவர்கள், தமது துறை அல்லாத வேறு புதிய வேலைகளுக்கு விண்ணப்பிக்கும் போது எந்தச் சலுகையும் வழங்கப்படாது. முதன் முறையாக அரசாங்க வேலைகளுக்கு விண்ணப்பிப்பவர்களைப் போலவே அவர்களும் விண்ணப்பிக்க வேண்டும். நேர்முகத் தேர்வின் போது அனைவரும் சமமாக நடத்தப்படுவர். சிறந்த மதிப்பெண்களைப் பெறுவோரே தேர்ந்தெடுக்கப்படுவர்.

13. சிறப்புச் சலுகைகள் யாருக்கு வழங்கப்படும்?

உடல் ஊனமுற்றோர், பூர்வகுடியினர் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டதில் (PPRT/PKR) அங்கம் வகிப்பவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படும். குறைந்த பட்சத் தகுதிகளக் கொண்டிருக்கும் பட்சத்தில், இவர்கள் விண்ணப்பிக்கும் வேலைகளுக்கு நேரடியாக நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். இருப்பினும், நேர்முகத் தேர்வின் போது, தேவையான அத்தாட்சிப் பத்திரங்களை இவர்கள் உடன் கொண்டு வருவது அவசியமாகும்.

14. தற்காலிக / குத்தகை அடிப்படையில் அரசாங்க வேலை செய்யும் அதிகாரிகளுக்கு நிரந்தர வேலைக்கான தேர்வில் ஏதெனும் சலுகைகள் வழங்கப்படுகின்றனவா?

இல்லை. இவர்களும் சரிசமமாக எல்லா நிபந்தனைத் தகுதிகளுக்கும் உட்படுவர்.

15. அரசாங்கத்தின் உபகாரச் சம்பளம் பெற்றவர்களுக்கு நிரந்தர வேலைக்கானத் தேர்வில் ஏதும் சலுகைகள் வழங்கப்படுகின்றனவா?

இல்லை. இவர்களும் சரிசமமாக எல்லா நிபந்தனைத் தகுதிகளுக்கும் உட்படுவர். சிறந்த மதிப்பெண்களைப் பெறுவோரே தேர்ந்தெடுக்கப்படுவர்.

16. தனியார் துறை அனுபவம் ஏற்றுக் கொள்ளப் படுமா?

இல்லை. இருப்பினும் நேர்முகத் தேர்வின் பொது அனுபவம் ஒருவருக்கு அதிக நம்பிக்கையை வழங்கும்.

17. அரசாங்க வேலைகளில் பணிப்புரிவதின் சிறப்புகள் யாவை?

அரசாங்க வேலைகலில் பனிப்புரிபவர்களுக்கு Elaun Perumahan, Cost of Living Allowance (Cola), Imbuhan Tetap Khidmat Awam (ITKA), வருடாந்திர சம்பள உயர்வு, கணினி, வீடு மற்றும் வாகன கடனுதவி, வருடாந்திர விடுமுறை, பிரசவ விடுமுறை போன்ற சலுகைகள் வழங்கப்படுகின்றன.

18. வேலைக்குத் தேர்ந்தெடுக்கும் போது IPTA/IPTS மாணவர்களிடையே பேதம் பார்ப்பதுண்டா?

எல்லா மாணவர்களும் நியாயமான முறையில்/சம நோக்குடன் பார்க்கப் படுவர். இதில் IPTA/IPTS என்ற பேதமில்லை.

19. எனது நுழைவுச் சம்பளம் எப்படி நிர்ணையக்கப் படுகின்றது?

நுழைவுச் சம்பளம், செய்யும் வேலை மற்றும் தகுதியைப் பொறுத்து அமையும்.

**நேர்முகத் தேர்வு**

1. SPA-வில் பதிவு செய்த பிறகு எப்பொழுது நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவேன்?

நேர்முகத் தேர்விற்கு நீங்கள் அழைக்கப்படுவது கீழ்க்கண்ட காரணங்களைப் பொறுத்து அமையும் :-

அ) SPA-விடம் அமைச்சு மற்றும் ஏனைய அரசு நிறுவனங்கள் வேலைக்கான காலியிடங்களை நிரப்பக் கேட்டுக்கொள்ளப்படுவது.

ஆ) விண்ணப்பிக்கும் வேலைக்கான நிபந்தனைத் தகுதிகளை நீங்கள் கொண்டிருப்பது.

இ) அடிப்படைத் தேர்வில் தேர்ச்சிப் பெறுவது.

இருப்பினும், எல்லா விண்ணப்பங்களும் SMSM (Sistem Mengambil Sepanjang Masa) தகவல் தளத்தில் பதிவு செய்யப்பட்டப் பின் அதற்கான ஒப்புதல் கடிதம் அனுப்பப்படும்.

2. நான் நேர்முகத் தேர்விற்கு ஏன் அழைக்கப்படவில்லை?

கீழ்க்கண்ட சில காரணங்களால் நீங்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படாமல் இருந்திருக்கலாம் :-

அ) நீங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருக்கும் வேலைக்கானக் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய SPA-விடம் கேட்டுக் கொள்ளப்படாமை.

ஆ) உங்கள் விண்ணப்பம் SPA-வின் தகவல் தளத்தில் முறையாகப் பதிவாகாமை.

இ) உங்கள் விண்ணப்பம் காலாவதியாகியோ அல்லது புதுப்பிக்கப்படாமலோ இருந்திருத்தல்.

ஈ) அடிப்படைத் தேர்வில் தேர்வாகாமல் போவது

உ) வேலைக்கான விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைத் தகுதிகள் இல்லாமை.

3. நேர்முகத் தேர்வு முடிவுகளை எப்படித் தெரிந்து கொள்வது?

நேர்முகத் தேர்வு முடிவுகள் கடிதத்தின் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கப்படும். இருப்பினும் http://www.spa.gov.my என்ற அகப்பக்கம் மூலமும், 600-83-7979 என்ற TeleSPA எண் மூலமும், 39111 என்ற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) அனுப்புவதன் மூலமும் முடிவுகளைத் தெரிந்து கொள்ளலாம்.

4. நான் நேர்முகத் தேர்விற்கு வரமுடியாத நிலையில் என்ன எதிர் நோக்க வேண்டியிருக்கும்?

நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு, வரமுடியாத நிலையில் தங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது.

5. நேர்முகத் தேர்விற்கான நேரத்தையும் இடத்தையும் மாற்ற முடியுமா?

ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணம் இருக்கும் பட்சத்தில் மாற்ற முடியும். இருப்பினும் கூடிய விரைவில் SPA - விற்கு இது தொடர்பாகக் கடிதம் எழுத வேண்டும். கடிதத்தில் உங்கள் பெயர், அடையாள அட்டை எண், தொலைபேசி எண், எந்த வேலைக்கான நேர்முகத் தேர்வு, உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தேதி, இடம் போன்ற விபரங்கள் இடம்

பெற்றிருக்க வேண்டும். மேலும், நீங்கள் எதிர்பார்க்கும் தேதி, இடம் ஆகியவற்றையும் குறிப்பிட வேண்டும்.

**காலாவதியாகும் நாள்**

1. எப்பொழுது விண்ணப்பத்தைப் புதுபிக்க வேண்டும்?

விண்ணப்பம் சராசரியாக ஓர் ஆண்டு மட்டுமே செல்லுப்படியாகும். காலாவதியாகும் விண்ணபத்தைப் புதுப்பிக்க வேண்டும். விண்ணப்பம் புதுப்பிக்கப்படாததால் பலர் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் வாய்ப்பை இழக்கின்றனர். மேலும், நீங்கள் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கும் வேலைகளை மாற்ற விரும்பினாலும் விண்ணபத்தைப் புதுப்பிக்க வேண்டும். இதை எப்பொழுது வேண்டுமானாலும் செய்யலாம். ஒரு வருடம் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. KPSL அதிகாரிகள் விண்ணபத்தைப் புதுப்பிக்கக் கடிதம் அனுப்பினாலே போதுமானது. புதிய விண்ணப்பப் பாரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியதில்லை.